**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**S.C. No: 156/2024**

**Deposition of Witnesses for PW1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சதீஸ்குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 05.11.2025

**எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது மணப்பாறை காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.03.2024 ம் தேதி SI வினோத் குமார் அவர்களும் நானும், செல்வக்குமார் ரோந்து அலுவலலில் இருந்த போது SI வினோத் குமார் அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இலுப்பூரில் உள்ள கண்ணார் தெருவில் உள்ள பெட்டிகடையில் ஹான்ஸ் புகையிலை 142 பாக்கொட்டுகள் மற்றும் அதன் மொத்த எடை 2.870 கி.கி விமல் V1 மற்றும் விமல் V10 ஆகிய போதை வசுக்களை எதிரி வைத்திருந்ததை புகையிலையை உதவி ஆய்வாளர் கைப்பற்றி எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதில் உதவி ஆய்வாளர் வினோத் குமார் , செல்வக்குமார் , நானும் கையொப்பம் செய்தோம், பின்பு எதிரியை காவல் நிலையத்திற்கு 9.45 மணிக்கு அழைத்துசென்றோம்.பின்பு வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். இது போன்ற வழக்குகளில் தனிநபர் சாட்சிகளை அழைத்தும் அவர்கள் வரவில்லை என்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது உதவி ஆய்வாளருக்கு தெரியுமா என்றால் தெரியும். கைப்பற்றுதல் மகஜரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரியை சார்பு ஆய்வாளர் திரேக பரிசோதனை செய்தார் என்றால் சரிதான். எதிரியை திரேக பரிசோதனை செய்யும் முன்பு எதிரிக்கு உள்ள உரிமையை எடுத்து செல்லி பின்பு திரேக பரிசோதனை செய்ய வேண்டும் என்பது சட்டம் என்றால் சரிதான். திரேக பரிசோதனை செய்வதற்கு சோதனை சம்மத கடிதம் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். வீட்டில் இருந்த எதிரியை அழைத்து வந்து பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான் ரைடுக்கு செல்லவில்லை என்றும் எதிரிக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும் எதிரியிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் எதிரியின் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றும் அதற்காக வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டும் மேற்படி ஆவணங்களில் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து விட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him/her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai